PRAYER UNITED

# GE13

## MOBILISING PRAYER FOR GENERAL ELECTIONS 2013






“தேவரீர் சகலத்தையும் செய்யவல்லவர்;
நீர் செய்ய நினைத்தது தடைபடாது
என்பதை அறிந்திருக்கிறேன்.” ~**யோபு 42:2**

PU
PRAYER
UNITED

*For private circulation only*

# பிரிவு 2
# பொதுவான ஜெப குறிப்புகள்

PRAYER UNITED

# சமாதான தேர்தலுக்காக தேவனுடைய நோக்கம் நிறைவேற ஜெபம்.

- இந்த தேர்தல் காலத்தில், நம் தேசத்தைக் குறித்து தேவனுடைய திட்டங்களும், நோக்கங்களும் உறுதி பட ஜெபியுங்கள்
- தேவனை பின் படுத்துகிற தேசமாயிருக்க மற்றும் பூமியுள்ள மற்ற தேசங்களுக்கு ஆசீர்வாதமாகயிருக்க ஜெபியுங்கள்.
- தேர்தல் நேரத்திலும் தேர்தல் பிறகும் சமாதானத்திற்காகவும் ஒற்றுமைக்காகவும் மற்றும் எல்லா வேட்பாளருகளுக்கும் அதிகாரிகளுக்கும் வாக்காளருக்கும் பாதுக்காப்புக்காக ஜெபியுங்கள்.
- தேர்தல் நேரத்திலும் தேர்தல் பிறகும் எல்லா வித வன்செயல் கலவரம் துண்டுக்கோலை தேவன் மேற்கொண்டு நிறுத்தி, தேசத்திலுள்ள எல்லா சமுதாயத்தின் நல் நலத்திற்காக சமாதானமும் ஒற்றுமையும் நிலைத்திருக்க நாங்கள் தேவனை கேட்கிறோம்.
- தேர்தல் நேரத்திலே தீங்கும் அநீதியும் பலவிதமான முரட்டாட்டம் செயல் படாத அந்தகாரத்தின் வல்லமையின் சுகந்திரம் கட்டப்பட ஜெபியுங்கள்.

# தேசிய மாநில அளவில் ஜெபம்

*“நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி”.*
*-நீதிமொழிகள் 14:34*

1. சட்ட மன்ற பகுதியிலும் பாராளுமன்ற பகுதிலும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதியின் ஆணும்பெண்ணும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட ஜெபியுங்கள்
2. மாநில, நகரம் பட்டணத்தின் கவுன்சிலர், பாராளுமன்ற அங்கத்தினர், செனட்டர், மேயர், அமைச்சர் மற்றும் பிரதமர் தேவனால் உண்மையாய் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணும் பெண்ணுமாக உண்மையும்,நியாயத்தையும் நீதியும் ஆதரிப்பவர்களாகயிருக்கும் படி ஜெபியுங்கள்.
3. மக்களின் உரிமைகளையும் நியாயத்தை ஆதரிப்பவர்களாகவும் ஊழல் அற்றவர்களாகவும் நன்நெறி உள்ளவர்களாகவும் நம்பிக்கையின் சுதந்திரத்தை மதிக்கிற அரசாங்கம் உருவாக்கப்படும் படியாக ஜெபியுங்கள்.
4. ஞானத்தோடு தேசிய கடன்களை நிறுவாகிக்க,தரமான கல்வி கொடுக்க நல் உக்கிராணத்துவத்தை ஆதரிக்கக்கூடிய அரசாங்கம் உருவாக்கும் படியாக ஜெபியுங்கள்.

PRAYER UNITED

# தேசிய மாநில அளவில் ஜெபம்

*“நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.”*
*-நீதிமொழிகள 14:34*

5. எல்லாருக்கும் செழிப்பையும் ஒப்புரவாதத்தையும் மற்றும் ஒற்றுமை இணைக்கும் சமாதானக் காரணர்களாக இருக்கும் ஆண்களும் பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட ஜெபியுங்கள்.
6. அந்நியர்களையும் மற்றும் அகதிகளையும் தவறாக நடத்துகிற செயல்களையும் ஆதிவாசிகளை ஒடுக்கிற செயலும் நிறுவனமயமாக்கப்பட்ட இன வாதத்தையும் உடைத்து செயல் படுத்தக்கூடிய தார்மீக மற்றும் அரசியல் மனோபலமுள்ள நீதியுள்ள ஆண்களும் பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட ஜெபியுங்கள்.
7. வெறுப்பு, குறும்பு மற்றும் இன மத பிளவை அனைத்து விதமான தூண்டக்கூடிய தீவரவாதிகள் தேர்ந்தெடுக்கப்படாமலிருக்க ஜெபியுங்கள்.
8. ஊடக அங்கத்தினர் உண்மையாகவும் நேர்மையாகவும் செய்தியை வெளியிட, உண்மையான தகவல்களை கொடுத்து எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுடைய கட்சித்திட்ட அறிவிப்பை அறிவிக்க சம உறிமை கொடுக்க ஜெபியுங்கள். –அவர்கள் வெறுப்பை தூண்டாமல், வதந்தியைப் பரப்பாமல் சமாதானமும் ஒப்புரவாதமும் நிலை நாட்ட, ஊடகங்கள் ஒற்றுமையினைப்பின் கருத்துக்களை வெளியிட ஜெபியுங்கள்

PRAYER UNITED

# சபைக்காக ஜெபம்

*“சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்” –ஏசாயா 9:7*

1. சபையானது இந்த இக்கட்டான காலத்திலே முழுமையாய் விழிப்பு அடைந்து, ஈடுப்பட்டு பெலப்படுத்தப்பட்டு நம் தேசத்திலும் உலகம் முழுவதும் தேவனுடைய நோக்கங்கள் அபிவிருத்தி பட, இந்த தேர்தலின் முக்கியதுவத்தையும் அவசரத்தையும் புரிந்துக் கொள்ள ஜெபியுங்கள்.
2. தேவனுடைய நாமத்தை உயர்த்தவும் அவருடைய மகிமை இத் தேசத்திலே உயர்த்தப்படவும் பக்தி வைராக்கியத்திற்காக ஜெபியுங்கள்.
3. இந்த ஜெப காலத்திலே சபை ஒற்றுமையாய் இருக்க ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த ஜெபியுங்கள்.
4. சபையானது நல்ல பிரஜையாக இருக்கவும் மற்றும் அனைத்து உறுப்பினர்கள் வாக்களிக்க கட்டுமான பணியில் ஈடுப்பட ஊக்கவிக்கும்படியாக ஜெபியுங்கள்.

PRAYER UNITED

# பாதுக்காப்பு அதிகாரிகளுக்கும் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கும் ஜெபம்

*கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது:சுமுத்தரையான நிறைக்கல்லோ அவருக்குப் பிரியம். –நீதிமொழிகள் 11:1*

1. தேர்தலில் ஈடுப்படுகிற எல்லா அதிகாரிகளும், தேர்தல் அதிகாரிகளும், நியமிக்கப்பட்டவர்கள், போலீஸ்காரர், ரேளா மற்றும் இராணுவம் உட்பட, உண்மையாகவும் நேர்மையாகவும் சேவை செய்ய ஜெபியுங்கள்.பிரச்சார நேரத்திலே அவர்கள் ஞானத்தோடும் நீதியாகவும் செயல் பட மற்றும் தேர்தல் முடிவு பெறும் வரைக்கும் சமாதானத்தை நிலை நாட்ட ஜெபியுங்கள்.
2. எல்லா தேர்தல் அதிகாரிகளுக்கும் வாக்களிப்பு மற்றும் எண்ணும் முகவருக்கும், தேர்தல் பார்வையாளர்களுக்கும் ஊக்கமாகவும் கனமாகவும் சேவை செய்து, முழு தேர்தலிலும் துல்லியமாகவும் நேர்மையாகவும் நடத்த ஜெபியுங்கள்.
3. பாதுக்காப்பு படைகள், பாரபட்சமாகயிருந்து மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கு பாதுகாப்பு கொடுத்து நியாயமாக நடந்து கொண்டு தேசத்தின் சமாதானத்தைக் காக்க ஜெபியுங்கள்.

# வாக்காளருக்கு ஜெபம்

*ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார். –ஏசாயா 11:2-3*

1. ஒவ்வொரு பிரஜையும் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு நீதியின் ஆணுக்கும் பெண்ணுக்கும் வாக்களிக்க ஜெபியுங்கள்.
2. ஒவ்வொரு கிருஸ்தவ வாக்காளர்களும் தங்களுடைய உக்கிராணத்தை செயல் படுத்தி தேசிய கட்டிட பணியில் பங்கேற்று, வாக்களிக்க வந்து தேசிய பொறுப்பை நிறைவேற்ற ஜெபியுங்கள்.
3. அவர்கள் தீர்மானம் பண்ணி வாக்களிக்கும் போது தேவனுடைய ஆவி அவர்கள் மேல் நிழல் நாட்ட ஜெபியுங்கள்.
4. ஒவ்வொரு வாக்காளர் மீது ஞானமும் பகுத்தறிவும் மற்றும் துணிச்சலின் ஆவி ஊற்றப்பட்டு,பயத்தையும் சத்தியத்தையும் மறைக்கிற நபர்களினால் பாதிக்கப்படமாலும் வதந்திக்கும் பொயிக்கும் பணத்திற்கும் விழுந்து விடாதப்படிக்கும் ஜெபியுங்கள். வாக்காளிக்கும் நாளில் வாக்கு செலுத்த வரிசையில் நிற்கும் ஒவ்வொரு இருதயத்தில், நீதியின் ஆவியும் துணிச்சலும், தேச பற்றும் இருக்கும் படியாக ஜெபியுங்கள்.

# பாராளுமன்ற தொகுதிகளுக்கு ஜெபம்

- இந்த 13 –வது பொது தேர்தலில் 222 பாராளுமன்ற தொகுதிகளில் போட்டி உண்டு. பின்வரும் பாராளுமன்ற தொகுதிகளில் இப் பிரிவில் வழங்கப்படும் மாநிலங்களை பொருத்து பிரிக்கப்படுகின்றன.
- பின் வருகின்றவையை செய்வதினால் இந்த 13-வது பொது தேர்தலிலே நீதியான ஆணும் பெண்ணும் உயர்த்த பட நீங்கள் ஜெபிக்க உற்சாகப்படுத்துகிறோம்.

1. உங்களுடைய ஜெபத்திலே உங்களுடைய மாநிலத்தையும் உங்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு தொகுதிகளையும் நினைவுக் கூறுங்கள்.
2. உங்களுக்கு சொந்த இல்லாத ஒரு மாநிலத்தை தத்தெடுங்கள்
3. சபா மற்றும் அல்லது சரவாக்கில் உள்ள தொகுதிகளுக்காக ஜெபியுங்கள்.
4. மத்திய அரசு அமர்ந்துள்ள கோலாலம்பூர்,புத்ரா ஜெயா மற்றும் லாபூவானுக்காகவும் மத்திய அரசு எல்லையின் தொகுதிகளுக்கு ஜெபியுங்கள்.

# மாநில தொகுதிகளுக்கான ஜெபம்

- மலேசியாவிலுள்ள 13 மாநில அரசுகள் உள்ளன. பொதுவாக மாநில அரசு தேர்தலில் பாராளுமன்ற தேர்தலில் இணைந்து நடத்தப்பட்டது. எனினும் 13 வது பொது தேர்தலில் உள்ள 12 மாநிலங்களில் போட்டியில் உள்ளன. அதாவது சரவாக் மாநிலம் விடப்படுகிறது.
- தற்போது 13 மாநில அரசுகளின் 4 பக்காத்தான் ராயட் ஆளுகையில் உள்ளது. – சிலாங்கூர், பினாங்கு, கெடா மற்றும் கிளாந்தான் - சிலாங்கூர் மற்றும் பினாங்கு மலேசியாவிலுள்ள மிகுந்த செல்வமுள்ளது.
- இந்த 13 வது பொது தேர்தலில் ஒவ்வொரு மாநில அரசாங்கத்தில், நீதியுள்ள ஆணும் பெண்ணும் உயர்த்தப்பட்டு, மாநிலத்தின் சொத்து உடமைகளை மக்களின் பயனுக்காக ஞானத்தோடும் நேர்மையோடும் நிர்வாகிக்கப்படவும் மற்றும் மக்கள் நீதியோடும் கவனிக்கப்படவும் நீங்கள் ஜெபிக்கும் படியாக உற்சாகப்படுத்துகிறோம்.
- இவ்வண்ணமாய் ஜெபம் செய்யுங்கள்.

1. உங்களுடைய ஜெபத்திலே உங்களுடைய மாநிலத்தையும் உங்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு தொகுதிகளையும் நினைவுக் கூறுங்கள்.
2. உங்களுக்கு சொந்த இல்லாத ஒரு மாநிலத்தை தத்தெடுங்கள்
3. சபா மற்றும் அல்லது சரவாக்கில் உள்ள தொகுதிகளுக்காக ஜெபியுங்கள்.

PRAYER UNITED